www.padippakam.com

## இலங்கையில் சித்ரவதை:

# 6 தமிழ் வாலிபர்கள் சுட்டுக்கொலை!

7/8/79

## தமிழர் தலைவர் வெளியிட்ட நெஞ்சை உருக்கும் தகவல்கள்!!

கொழும்பு, ஆக. 7—

இலங்கையில் 6 தமிழ் வாலிபர்கள் சித்ரவதை செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று தமிழர் தலைவர் நெஞ்சை உருக்கும் தகவல்களை வெளியிட்டு உள்ளார்.

இலங்கை தமிழர்கட்சி தலைவர் அமிர்தலிங்கம் ஜனாதிபதி ஜெயவர்த்தனேக்கு ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:—

### எதுவும் நடக்கலாம்

நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்ட பின் போலீசார் நிகழ்த்திய படுகொலைகளைத் தொடர்ந்து யாழ்பாணத்தில் பீதி நிலவுகிறது. எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை உள்ளது.

இந்த நிலைமைபற்றி நான் உங்களுக்கு (ஜனாதிபதிக்கு) ஏற்கனவே டெலிபோன் மூலம் உங்கள் கவனத்துக்கு கொண்டு வந்தேன். இந்த படுகொலைகள்பற்றி தகவல் வந்து உள்ளது. இதற்கு காரணமானவர்கள் கைது செய்யப்படுவார்கள், அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று எனக்கு உறுதி அளித்தீர்கள்.

ஆனால் இந்த கொலைகள் நடந்து 10 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன. குற்றவாளிகளை கண்டுபிடிக்க எதுவும் செய்யப்படவில்லை.

### 6 பேர் கொலை

காணப்பட்டன:

அவரது நெற்றியில் துப்பாக்கியால் சுட்டுக்கொன்று இருக்கிறார்கள்: அவரது மண்டை உடைக்கப்பட்டு இருக்கிறது. துப்பாக்கி குண்டுகள்பாய்ந்த தடத்தை மறைப்பதற்காக மூளையை தோண்டி எடுத்து இருக்கிறார்கள்.

2. சரவணமுத்து செல்வரத்தினம் (29)

இவரும் சித்ரவதை செய்யப்பட்டார். கழுத்தில் சுட்டுக்கொன்றார்கள். அவருடைய மூளையை தோண்டி எடுத்து விட்டார்கள்.

3. ராமலிங்கம் பாவேந்திரன் (24)

4. செல்லதுரை ராஜேசுவரன் (24)

5. செல்லதுரை பரமேசுவரன் (24)

6. அய்யாதுரை இந்திரராஜா (19)

### பிணங்கள் எங்கே?

இந்த 6 பேரில் 3 பேர் பிணங்கள் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளன. மற்ற 3 பேர் பிணங்கள்பற்றி இன்னும் தகவல் இல்லை.

ஜெயந்திரன் என்ற மூர்த்தியும் 13-ந்தேதி இரவு கைது செய்யப்பட்டு போலீஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டார். ராஜேசுவரனை போலீசார் அடித்துக் கொன்றதை அவர் பார்த்து இருக்கிறார்.

### இன்னொரு ஆதாரம்

படிப்பகம்

www.padippakam.com

அதே நேரத்தில் மேலும் ஒரு வாலிபர் கைது செய்யப்பட்டார். ஈவு இரக்கமின்றி தாக்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் சிறையில் வைக்கப்பட்டு மரணம் அடைந்தார்.

ஜூலை 13-ந் தேதி இரவு 3 வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர். போலீஸ் நிலையத்தில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது அவர்களையும் காணவில்லை. போலீசார் அவர்களை கொன்று பிணத்தை அப்புறப்படுத்தி விட்டதாக சில ஆதாரங்கள் கிடைத்து உள்ளன.

இவர்களையும் சேர்த்து கொலை செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 6 ஆகி உள்ளது.

## யார், யார்?

கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களின் பெயர்களையும் விவரங்களையும் குறிப்பிட விரும்புகிறேன்.

1. கனகரத்தினம் விசுவஜோதி ரத்தினம் என்ற இன்பம் (வயது 27)

இந்த இளைஞர் ஜூலை 14-ந்தேதி அதிகாலை 1 மணிக்கு கைது செய்யப்பட்டார். காலையில் ரோடு ஓரத்தில் அவரது பிணம் கண்டுபிடிக்கப்பட்டது.

## [illegible]லையை தோண்டினார்கள்

அவரது உடலில் பல தீக் காயங்கள் இருந்தன. இது தவிர சித்ரவதை செய்ததற்கான அடையாளங்களும் ஜூலை 10-ந்தேதி 10 அல்லது 10-30 மணி அளவில் யாழ்ப்பாணத்தில் நடந்த இன்னொரு நிகழ்ச்சி பற்றிய ஆதாரத்தையும் முன்வைக்க விரும்புகிறேன்.

சபாரத்தினம் ஸ்ரீதரன் (32), கே. விஜயகுமார் என்ற இருவர் யாழ்ப்பாணம் பொன்னம்பலம் ராமநாதன் ரோட்டில் சைக்கிளில் சென்று கொண்டு இருந்தார்கள். ஒரு கோவிலை அலங்காரம் செய்தபின் அவர்கள் சைக்கிளில் சென்றார்கள்.

## துப்பாக்கி சூடு

அந்த வழியாக ஜீப்பில் சென்ற போலீசார் அவர்களை துப்பாக்கியால் சுட்டார்கள். அவர்களில் சபாரத்தினம் காயம் அடைந்தார். அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். விஜயகுமார் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு உள்ளார்.

போலீசாரை அந்த வாலிபர்கள் சுட்டதாக வழக்கை மாற்ற போலீசார் முயன்று வருகிறார்கள். ஆனால் போலீஸ் சூப்பிரண்டு இந்த கட்டுக்கதையை உணர்ந்து அந்த வாலிபர்களை ஜாமீனில் விடுதலை செய்து இருக்கிறார்.

## நடவடிக்கை எடுங்கள்

என்னுடைய கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட இந்த சம்பவங்களை நான் குறிப்பிட்டு இருக்கிறேன். இந்த கோரக் கொலைகளுக்கு காரணமான போலீஸ் அதிகாரிகளை கைது செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தாமதமின்றி இதைச் செய்ய வேண்டும்.

இதை செய்யத் தவறினால் போலீஸ் மீதும் சட்டபூர்வமான ஆட்சியின் மீதும் மக்களுக்கு உள்ள நம்பிக்கை போய்விடும்.

## விசேஷ சட்டம்

பயங்கரவாதிகளை அடக்குவதற்காக இப்போது விசேஷ சட்டம் கொண்டுவரப்பட்டு உள்ளது. எனவே நெருக்கடி நிலை என்ற காட்டாட்சியை யாழ்பாணத்தில் இருந்து அகற்றும்படி கேட்டுக் கொள்கிறேன். சட்டப்படியான ஆட்சியை அமுல்படுத்துங்கள்.

இவ்வாறு அமிர்தலிங்கம் கடிதத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

படிப்பகம்